# ஸ்ரீ இராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி
## வட்டமலைப்பாளையம், கோவை-22.

In Commemoration of the Silver Jubilee Year

முன்னாள் மாணவர் சங்கம்    தமிழ் மன்றம்

வழங்கும்



# யாளி'19

## கலை இலக்கியப் போட்டிகள்

02
மார்ச்


பாலாஜி : 8940928351
தரணி தமிழினியன் : 9597321815

srec_tamilmandram

yali2k19@gmail.com

www.srec.ac.in

# ஸ்ரீ இராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி

கோவை – 641 022.

## தமிழ் மன்றம்

# யாளி’19

மறத்தமிழனின் மண்வாசம்
மாறாப்போட்டிகள்

வரலாற்றைத் தேடி

02-03-2019
(சனிக்கிழமை)

**பொது விதிமுறைகள்:**

- பங்கேற்பாளர்கள் அனைவரும் தங்கள் கல்லூரி அடையாள அட்டையை எடுத்து வருதல் அவசியம்.
- குழுப்போட்டிகளில் பங்குபெறுவோர் தங்கள் குழுவின் பெயர், குழுவில் ஒருவரது பெயர், அவரின் மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண் ஆகியவற்றை **yali2k19@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **24.02.2019** தேதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் அவசியம்.
- போட்டியன்று காலை 9.00 மணிக்குள் பதிவு செய்தல் வேண்டும்.
- பதிவுக் கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூபாய் 120 (மதிய உணவு வழங்கப்படும்).
- பதிவு செய்யும் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
- அனைத்துப் போட்டிகளிலும் நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
- அதிகப் புள்ளிகளுடன் வெற்றி பெரும் கல்லூரிக்குக் கோப்பை வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட போட்டிகளில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் நேர மேலாண்மையைக் கடைபிடித்தல் நலம்.

**மேலும் விபரங்களுக்கு**

பாலாஜி : 8940928351
தரணி தமிழினியன் : 9597321815

**பரிசுத் தொகை**
**ரூ.30,000**

### உரிமைக் குரல் (பேச்சுப் போட்டி)

*செந்தமிழ் சொட்ட விட்டுச்*
*செவிகளைச் சானை செய்து*
*கற்பனையும் கதையும்*
*கலவை செய்து செய்யும்*
*கருத்துப் போர்*

விதிமுறைகள்

- தனி நபர் போட்டி, இரண்டு சுற்றுகளாக நடைபெறும்.
- முதல் சுற்றில் கொடுக்கப்படும் தலைப்பில் 3 நிமிடங்களுக்குப் பேச வேண்டும்.
- இறுதி சுற்றின் விதிமுறைகள் போட்டி நடைபெறும் இடத்தில் தெரிவிக்கபடும்.
- பிறமொழிச் சொற்கள் கலவாமல் பேசுதல் நன்று. (ஆபாசம் அறவே கூடாது.)

### சிந்தையின் வரிகள் (கவிதைப் போட்டி)

*உள்ளத்தின் உணர்வுகளை எழுப்பி*
*உதிரம் வழி நிறுத்தி*
*பேதையவள் தமிழை வாழ்த்தி*
*கவிதை காண்பாய் கவியே !*

விதிமுறைகள்

- தனி நபர் போட்டி, ஒரே சுற்றாக நடைபெறும்.
- போட்டிக்கான தலைப்புகள் நிகழ்வின் போது வழங்கப்படும்.
- படைப்புகள் போட்டியாளர்களின் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும்.
- இரட்டை அர்த்த வார்த்தைகளைத் தவிர்க்கவும்.
- போட்டிக்கான கால அவகாசம் 30 நிமிடங்கள் மட்டுமே.

### குறளெடு கதைகொடு

*அடியில் உலகை அறிவாய்*
*வள்ளுவன் வாய்மொழி வழியாய் !*
*அதை நீ வரைவாய்*
*கதை என்னும் உருவாய் !*

விதிமுறைகள்

- தனி நபர் போட்டி, ஒரே சுற்று - எழுத்து வடிவில் நடைபெறும்.
- கொடுக்கப்படும் குறளுக்கு ஏற்ப கதையை எழுத வேண்டும்.
- புதுமையும் கற்பனையும் நிறைந்த கதையாக அமைத்தல் நலம்.
- போட்டிக்கான கால அவகாசம் 1 மணி நேரம் மட்டும்.

### தனி ஒருவன் (தனிநபர் நடிப்பு)

*தாயணு கோட்டை தாக்கி*
*தலை கொண்டு கருமொழியாய்*
*தமிழ் கண்டு தரை வீழும்*
*ஒவ்வொரு முளையமும்*
*ஒருவகையில் தனித்தனி கலைஞர்தான்*

விதிமுறைகள்

- தனி நபர் போட்டி, இரண்டு சுற்றுகளாக நடைபெறும்.
- முதல் சுற்றில் போட்டியாளர்கள் சொந்தத் தலைப்பைபில் நடிக்க வேண்டும்.
- இரண்டாம் சுற்றிற்குத் தேர்வானவர்களுக்குப் போட்டி நடைபெறும் இடத்தில் தலைப்புகள் கொடுக்கப்படும்.
- கொடுக்கப்படும் சூழலிற்கு ஏற்ற நடிப்பை வெளிப்படுத்த வேண்டும்.

### வணிக வித்தகர்கள் (கிராமத்துச் சந்தை)

*உலகம் கண்டவன் தமிழன்*
*அதில் முன்னே நின்றவன் வணிகன்*
*நீயும் வருவாய் தமிழனாய்*
*பூம்புகாரின் வணிகனாய்*

விதிமுறைகள்

- ஒரு அணிக்கு மூவர் மட்டும், இரண்டு சுற்றுகளாக நடைபெறும்.
- ஒருவர் ஒரு அணியில் மட்டுமே பங்குபெற முடியும்.
- ஒரு கல்லூரிக்கு 2 அணிகள் மட்டுமே அனுமதிக்கப்படும்.
- முதல் சுற்று எழுத்து வடிவில் நடைபெறும்.
- இரண்டாம் சுற்றிற்குத் தேர்வானவர்களுக்குத் தலைப்பு போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும்.

### மரபுத் தமிழன்/ மரபுத் தமிழாள்

*ஏழுகண்டம் கட்டியாண்ட*
*வீரத்தமிழன் நீ !*
*முத்தமிழ் முழுமை கண்ட*
*முதல்வன் நீ !*
*மன்னவன் கண்ட மரபுத்தமிழை*
*மறவாய் நீ !*
*மரபுத் தமிழன்/தமிழாள் ஆவாய் நீ !*

விதிமுறைகள்

- தனி நபர் போட்டி, மூன்று சுற்றுகளாக நடைபெறும்.
- முதல் சுற்று எழுத்து வடிவில் நடைபெறும்.
- இரண்டாம் சுற்றிற்கு தேர்வானவர்களுக்கு விதிமுறைகள் போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும்.
- இரண்டாம் கட்டத் தேர்வில் தேர்ந்தெடுக்கபடுவோர் இறுதி சுற்றில் பங்கு பெறலாம்.

### தடயங்களைத் தேடி

*தடயங்கள் தேடுவோம் தமிழனாய் – மறைந்த*
*தமிழனைத் தேடுவோம் வீரனாய்*
*நம்மை நாமே உணர்வோம்*

விதிமுறைகள்

- தடயம் கண்டு பேணுவோம்
- தனி நபர் போட்டி, இரண்டு சுற்றுகளாக நடைபெறும்.
- முதல் சுற்று எழுத்து வடிவில் நடைபெறும்.
- வரலாறு பற்றிய கேள்விகள் கேட்கப்படும்.
- இரண்டாம் சுற்றிற்குத் தேர்வானவர்களுக்குப் போட்டிக்கான விதிமுறைகள் போட்டி நடைபெறும் இடத்தில் தெரிவிக்கபடும்.

### வில்லுப்பாட்டு

*சல்சல் சலங்கை ஒலியுடன்*
*பஞ்ச வாத்தியங்கள் முழக்கி*
*பல்லவி சரணம் அமைத்து*
*வில்லொடு பாடும் வில்லிசை*

விதிமுறைகள்

- ஒரு அணிக்கு 5 முதல் 8 போட்டியாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- ஒரு கல்லூரிக்கு ஒரு அணி மட்டுமே அனுமதிக்கப்படும்.
- ஒரே சுற்றாக நடைபெறும், போட்டிக்கான கால அவகாசம் 15 நிமிடங்கள் மட்டும்.
- கொடுக்கப்பட்டுள்ள தலைப்பை மையப்படுத்தி பாடல் அமைத்தல் வேண்டும்.
- போட்டியாளர்கள் இசைக் கருவிகளைத் தாமே கொண்டுவர வேண்டும்.
- முன்பதிவு செய்தல் அவசியம்.
- **தலைப்பு :** **உலகை அசத்தும் தமிழ் தலைமுறைகள்**
  **அறியப்படாத தமிழகம்**
  **புராணக் கதைகள்**

### ஊமை மொழிகள் (மௌன நாடகம்)

*அசைத்து அசைத்துத்*
*திசையை அசைக்கும்*
*அசைவுகளின் இசைவு*

விதிமுறைகள்

- ஒரு அணிக்கு 5 முதல் 8 போட்டியாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- ஒரு கல்லூரிக்கு ஒரு அணி மட்டுமே அனுமதிக்கப்படும்.
- ஒரே சுற்றாக நடைபெறும், போட்டிக்கான கால அவகாசம் 10 நிமிடங்கள் மட்டும்.
- கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் மௌன நாடகம் அமைதல் வேண்டும்.
- அணியினர் அனைவரும் ஒரே விதமான உடை, முகச்சாயம் மற்றும் கையுறை அணிதல் நலம்.
- பாடல்கள், விளக்கப் படங்கள் அல்லது வசனங்கள் உபயோகிப்பதைத் தவிர்க்கவும்.
- தண்ணீர், கண்ணாடி மற்றும் எளிதில் எரியக் கூடிய பொருட்கள் உபயோகித்தல் கூடாது. ஆபாசம் அறவே கூடாது.
- முன்பதிவு செய்தல் அவசியம்.
- **தலைப்பு :** **கால இயந்திரம்**
  **மௌனக் "குறள்"**
  **அழிக்கும் அறிவீனம்**

### அரிதாரம் பூசு அறிவாய் பேசு (தெருக்கூத்து)

*அரிதாரம் பூசிக்கொண்டு*
*மேள தாள இசையோடு*
*மேடையேறி ஆடி வந்தோம்*
*அயராது உழைக்கும் மக்களின்*
*சோர்வைப் போக்கிடச்*
*சோர்ந்து சோர்ந்து*
*சேர்ந்து வந்தோம்*
*உங்கள் சோகங்களையெல்லாம்*
*போக்க வந்தோம்*

விதிமுறைகள்

- ஒரு அணிக்கு 10 முதல் 14 போட்டியாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- ஒரு கல்லூரிக்கு ஒரு அணி மட்டுமே அனுமதிக்கப்படும்.
- ஒரே சுற்றாக நடைபெறும், போட்டிக்கான கால அவகாசம் 10 நிமிடங்கள் மட்டும். கால அவகாசத்தை மீறினால் மதிப்பெண் குறைக்கப்படும்.
- கொடுக்கப்பட்டுள்ள தலைப்பை மையப்படுத்திக் கூத்து அமைதல் வேண்டும்.
- இசைக் கருவிகளைப் போட்டியாளர்கள் கொண்டு வருதல் வேண்டும். சொந்த இசையாக இருத்தல் வேண்டும்.
- திரைப்பாடல்கள், வசனங்கள் உபயோகித்தல் கூடாது.
- தண்ணீர், கண்ணாடி மற்றும் எளிதில் எரியக் கூடிய பொருட்கள் உபயோகித்தல் கூடாது. ஆபாசம் அறவே கூடாது.
- முன்பதிவு செய்தல் அவசியம்.
- **தலைப்பு :** **செங்கோல் - அன்றும், இன்றும்**
  **தமிழம் தேடுவோம் தமிழனாய்**
  **உதிரம் கொதிக்குதடி கண்ணம்மா**